1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போடப்பட்டிருக்கிற குடிசைகள் தற்காலிகமாகப் போடப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே குடிசைமாற்று வாரியம் அவர்களுக்கென்று தனிக் கட்டடம் அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. விரைவில் கட்டடம் கட்டி முடிந்த பிறகு குடிசைகளில் இருப்பவர்கள் அங்கே குடியேறிவிடுவார்கள். அதற்குப் பிறகு இந்த இடம் அழகுப்படுத்தப்படும். தூய்மைப் படுத்தப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பெரிய போர்டு ஒன்று 'குடிசை மாற்று வாரியம்' என்று எழுதி வைத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : போர்டு எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம்.

கேளிக்கை வரி மீதான மேல்வரி

* 68 வினா.—**திரு. சி. கணேசன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேளிக்கை வரி மீது விதிக்கப்படும் சர்சார்ஜ் தொகையை மாநிலமெங்கும் ஒரே சீராக விதிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்த சர்சார்ஜிலே 90 சதவீதம் நகராட்சி மன்றங்களுக்குச் சேர்கிறது. ஆனால் இவைகளை சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் தான் வசூலிக்கிறார்கள். நகராட்சிகளுக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கோ சர்சார்ஜ் வசூலிக்கும் உரிமை இல்லை. இன்ஸ்பெக்ஷன் செய்யும் அதிகாரம் அவைகளுக்குத்தான் இருக்க வேண்டும். ஆகவே, இந்த அரசு சர்சார்ஜ் வசூலிப்பதில் மேற்பார்வையிடும் அதிகாரத்தை நகராட்சிகளுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கே கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிக் கொடுப்பதன் காரணமாக நன்மை ஏற்படுமா, அல்லது சங்கடங்கள் ஏற்படுமா என்பதை ஆராய வேண்டும். அதன் பிறகு தான் இப்போது இதன்மீது முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, கேளிக்கை வரி டூரிங் டாக்கீஸ்காரர்களுக்கு அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் குறைக்க வேண்டுமென்று டூரிங் டாக்கீஸ்காரர் களிடமிருந்து அரசாங்கத்திற்கு மகஜர் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : வரி கொப்பவர்கள் எப்போதும் அதிகம், அதிகம் என்றுதான் சொல்லுவார்கள். அவர்கள் தாங்கக்கூடியவர்கள்தானா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் வரக் கூடிய வருமானத்தில் முக்கியமானதாக இது அமைந்திருக்கிறது. இந்த வருமானத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி மன்றங் களும், நகராட்சிகளும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த வேண்டியதாக இருக்கின்றன. இந்த வரியும் போய்விட்டால் நிர்வாகத்தை நடத்துவதில் பல சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, ஒரு நகராட்சியைத் தவிர, 84 நகராட்சிகளிலே, 83 நகராட்சிகளில் 100 சதவீதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். உதகமண்டலத் தில் மட்டும் 75 சதவீதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். சேவையின் அடிப்படையில் அது போடப்படுகிறது.

Retired Municipal Employees

* 69 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that retirement benefit scheme for municipal employees is silent about those retiring prior to 14th January 1970;

(*b*) the steps that have been taken to rectify the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நகராட்சி மன்றம் அனைத்திலும் உயர்ப்பணியில் உள்ள பணியாளர்கள் தொடர்பாக, மாநிலமெங்கிலும் பரந்துநிற்கும் நகராட்சிப் பணியை 14—1—1970 முதல் அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 14—1—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற, மேற்சொன்ன பணியைச் சேர்ந்த நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய அனுகூலங்கள் நீட்டிக்கப்படும். 14—1—1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது பற்றிய வினா எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 14—1—1970 கெஜட்டில், ஜி.ஓ. 12, தேதி 5—1—1970-ல் 14—1—70-க்குப் பின்னால் ஓய்வு பெறக்கூடியவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படும் என்று அறிவித்தும்கூட, கிட்டத்தட்ட, இரண்டு ஆண்டு காலம் ஆகியும்